<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, மதுராந்தகம்</u>

முன்னிலை : செல்வி. பா.பவ்யா, **B.A, L.L.B.,**

நீதித்துறை நடுவர் எண்.2, மதுராந்தகம்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை

2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 27–ம் நாள்

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்: 33/2025</u>

அரசுக்காக,
உதவி காவல் ஆய்வாளர்,
மேல்வருவத்தூர் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.142/2023 ........ குற்றமுறையிடுபவர்

– எதிர் –

A1–பாலசுந்தரம், த/பெ.நாராயணசாமி,
கீழாண்டை தெரு, கிளியாநகர் கிராமம்,
மதுராந்தகம் தாலூக்கா.

A2–அம்சா, க/பெ.பாலசுந்தரம்,
கீழாண்டை தெரு, கிளியாநகர் கிராமம்,
மதுராந்தகம் தாலூக்கா.

A3–திருவேங்கடம், த/பெ.பாலசுந்தரம்,
கீழாண்டை தெரு, கிளியாநகர் கிராமம்,
மதுராந்தகம் தாலூக்கா.

A4–மங்கைலட்சுமி, த/பெ.பாலசுந்தரம்,
கீழாண்டை தெரு, கிளியாநகர் கிராமம்,
மதுராந்தகம் தாலூக்கா.

........ எதிரி

| | | |
|---|---|---|
| 1. | Name of the Court | Judicial Magistrate No. II, Madurantakam. |
| 2. | Name of the Judge | Selvi. B.Bavya, , B.A., L.L.B., |
| 3. | Date of Judgment | 10.04.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC. 33/2025<br>TNCG15-000234-2025 |
| 5. | Name of the Parties of the case | State Govt,<br>Sub Inspector of Police, Melmaruvathur Police Station.<br>**Complainant** |
| | | A1–பாலசுந்தரம், த/பெ.நாராயணசாமி,<br>A2–அம்சா, க/பெ.பாலசுந்தரம், |

<table>
<tr><td></td><td></td><td>A3–திருவேங்கடம், த/பெ.பாலசுந்தரம்,<br>A4–மங்கைலட்சுமி, த/பெ.பாலசுந்தரம்,<br>Accused</td></tr>
<tr><td>6.</td><td>Date of Occurrence</td><td>31.05.2023</td></tr>
<tr><td>7.</td><td>Date of Complaint</td><td>05.06.2023</td></tr>
<tr><td>8.</td><td>Date of Arrest if any and remand</td><td>-----</td></tr>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td>-----</td></tr>
<tr><td>10.</td><td>Date of release on bail</td><td>-----</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td>11.03.2024</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to the Court of Sessions</td><td>-------</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s. 316 Bharatiya Nagarik Suraksha Sanhita</td><td>09.05.2025</td></tr>
<tr><td>14.</td><td>Date of Examination in Chief and Cross Examination of the Witnesses</td><td><table>
<tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr>
<tr><td>PW1</td><td>29.05.2025</td><td>29.05.2025</td></tr>
<tr><td>PW2</td><td>29.05.2025</td><td>29.05.2025</td></tr>
<tr><td>PW3</td><td>27.10.2025</td><td>27.10.2025</td></tr>
<tr><td>PW4</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>15.</td><td>Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior Courts except routine petitions like petition U/s. 355 BNSS</td><td>------</td></tr>
<tr><td>16.</td><td>Date of Examination of the Accused U/s.351 of BNSS Act</td><td>16.03.2026</td></tr>
<tr><td>17.</td><td>Details of abscondence of an accused and his appearance / production as the case may be</td><td>Nil</td></tr>
<tr><td>18.</td><td>Grant of Stay by Superior Courts and the results there of</td><td>------</td></tr>
<tr><td>19.</td><td>Date of Commencement of Trial</td><td>09.05.2025</td></tr>
<tr><td>20.</td><td>Date of Closure of Trial</td><td>23.03.2026</td></tr>
<tr><td>21.</td><td>Date of Sentence of Order</td><td>10.04.2026</td></tr>
<tr><td>22.</td><td>Date of Service of Copy of Judgment to the Accused</td><td>------</td></tr>
<tr><td>23.</td><td>If any delay, give Explanation</td><td>------</td></tr>
</table>

****

இவ்வழக்கானது 26.02.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் ஆண்டுபட்டிகை வழக்கு எண் 33/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 10.04.2026–ம் தேதியன்று என்முன்பாக விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.K.தமிழரசு, திரு.M.சதிஷ் திரு.S.மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும் ஏற்று நடத்திய இவ்வழக்கில் வழக்காவணங்களை நன்கு பரிசீலனை செய்த பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>தீர்ப்புரை</u>

**1.** இவ்வழக்கானது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1) IPC–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டதை கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**<u>2. குற்றமுறையீட்டின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் கடந்த 31.05.2023ம் தேதி காலை 7.00 மணியளவில் சாட்சி–1 பாஸ்கர் என்பவரின் குடும்பத்தார் பனங்காய் பறித்தபோது பனங்காய் எதிரிகளின் நிலத்தில் விழுந்தது சம்மந்தமாக அன்று காலை 8.30 மணியளவில் சாட்சி பாஸ்கர் என்பவர் கிளியாநகர் கிராமத்தில் உள்ள அவரது கழனியில் தண்ணீர் பாய்ச்ச சென்றபோது 1 முதல் 4 வரையிலான எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து சாட்சி–1 பாஸ்கர் என்பவரை வழிமடக்கி உங்க ஆத்தா உன் மனைவி அப்படி பேசனாலே இப்போ நீ பேசிப்பாறேன் என பேசி பிரச்சனை செய்து எதிரிகள் கையால் தாக்கி சாட்சி–1க்கு உதட்டில் சொற்பகாயம் ஏற்படுத்தியும், எதிரிகள் அனைவரும் சேர்ந்து இது மாதிரி எல்லாம் செய்த நாங்க உன்னை உயிரோட வாழ விட மாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே, எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழ் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்றமுறையிடுபவர் தரப்பில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3**. குற்ற இறுதி அறிக்கையை பெற்று வழக்கினை 26.02.2025ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி ஆஜரானதன் பேரில் பிரிவு 230 BNSSன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் இலவசமாக

வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிகள் மீது வனையப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டுகளை குறித்து எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டது. அதற்கு எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பில் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4.** இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மற்ற பட்டியல் சாட்சிகள் விசாரிக்கப்படாமல் விட்டொழிக்கப்பட்டனர். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ அல்லது சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை. இவ்வழக்கில் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத் தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

**5.** அரசு தரப்பில், அ.சா.1 பாஸ்கரன் என்பவர் தனது சாட்சியத்தில் தான் தற்போது கிளியாநகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 11.00 மணிக்கு நான் கழனியில் இருந்து வீட்டிற்கு வரும்போது தன் மனைவி மாலாவுடன் ஆஜர் எதிரிகள் தங்கள் வீட்டில் உள்ள பனை மரத்தில் உள்ள பனம்பழம் அவர்களின் வீட்டின் நிலத்தில் விழுந்தது சம்மந்தமாக சண்டை போட்டார்கள் என்றும், தான் கேட்டபோது திருவேங்கடம் என்பவர் கல்லை எடுத்து மூக்கு மற்றும் வாயில் அடித்தார் என்றும், பின்னர் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிட்டேன் என்றும், எண்டத்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தையல் போட்டுவிட்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றும்,

போலிசார் மருத்துவமனை வந்து  தன்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், ஆனால் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும், மருத்துவமனையில் வைத்து போலிஸார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**6.** மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் 2023ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த காசிநாதன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும் என்றும், தற்போது அவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்று மேல்மருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வரும், அ.சா.4 மோகன் என்பவர் தனது சாட்சியத்தில் கடந்த 05.06.2023ம் தேதி காலை 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் காசிநாதன் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற பாஸ்கர் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.142/2023 இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் குப்பன் மற்றும் மணி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 20.06.2023ம் தேதி நிலையம் ஆஜரான எதிரிகளை குவிமுச பிரிவு 41A–ன் கீழ் பிணையில் விடுத்துள்ளார் என்றும், பின்னர் வழக்கில் காயம் பட்ட பாஸ்கர் என்பவருக்கு விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று வழங்கிய கீதா என்பவரை விசாரித்து இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து எதிரிகளிடம்  351(1)(ஆ) BNSS–ன் கீழ் வினவிய போது எதிரிகள்

அதனை மறுத்து கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**8.** இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய அம்சம் என்னவென்றால் அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)ன் கீழான குற்றச்சாட்டை நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

<u>**தீர்வு :–**</u>

**9.** பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 104 ன் படி எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சேர்ந்ததாகும். இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கினை நிரூபிக்க அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலாளன சாட்சிகள் விசாரிக்கபட்டு அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யபட்டுள்ளன. தற்போது தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது வனையப்பட்ட இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சிகளின் சாட்சியங்களின் மூலம் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா ? என்பதே ஆகும்.

**10.** அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அவர் கொடுத்துள்ளதாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 யைப் பரிசீலிக்கையில், தனது மனைவி மாலா என்பவருக்கும் பக்கத்து வீட்டினருக்கும் அடிக்கடி வாய்தகராறு ஏற்படும் என்றும், இந்நிலையில், 31.05.2023 ம் தேதி காலை 7 மணியளவில், தனது கழனி அருகே பணங்காய் பறிக்கும் பொழுது எதிரி கழனியில் விழுந்ததை அவர் எடுக்க சொல்லி தகராறு செய்ததால் தான் அதனை எடுத்து விட்டதாகவும், பின்னர் தான் கழனியில் மோட்டாரை இயக்கி தண்ணீர் பாய்ச்ச சென்ற பொழுது பாலசுந்தரம், அம்சா , திருவேங்கடம் மற்றும் மங்கைலட்சுமி ஆகியோர் தன்னை வழிமடக்கி "உங்க ஆத்தா உன் மனைவி அப்படி பேசினாலே இப்போ நீ பேசிப்பாறேன்" என பேசிக்கொண்டே பொழுது அனைவரும், தன்னை கையால் குத்தி உதட்டில் காயம் ஏற்படுத்தினர் என்றும், "இதுமாதிரி எல்லாம் செய்தால் உன்னை உயிரோட வாழவிடமாட்டோம்" என

மிரட்டியதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ஆனால், அ.சா.1 அவரது சாட்சியத்தில் போலிசார் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு வந்து தன்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், ஆனால், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் புகாரை சம்பவம் நடந்த அன்று மருத்துவமனையில் வைத்து கொடுத்ததாக கூறியுள்ளார் மேற்படி மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றில் மேற்படி அ.சா.1 பாஸ்கரன் என்பவர் 31.05.2023ம் தேதி காலை 10 மணிக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும், காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக குறிப்புள்ளது. ஆனால், மேற்படி அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தின் மேற்குறிப்பில், மேற்படி சம்பவம் குறித்த புகார் வாக்குமூலம் 05.06.2023ம் தேதி மேற்படி மருத்துவமனையில் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது புலன்விசாரணை குறித்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

**11.** அ.சா.1ன் சாட்சியத்தினைப் பரிசீலிக்கையில், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 11.00 மணிக்கு தான் கழனியில் இருந்து வீட்டிற்கு வரும்போது, தன் மனைவி மாலாவுடன் ஆஜர் எதிரிகள் தங்கள் வீட்டில் உள்ள பனை மரத்தில் உள்ள பனம்பழம் அவர்களின் வீட்டின் நிலத்தில் விழுந்தது சம்மந்தமாக சண்டை போட்டார்கள் என்றும், தான் கேட்டபோது திருவேங்கடம் என்பவர் கல்லை எடுத்து மூக்கு மற்றும் வாயில் அடித்தார் என்று சாட்சியமளித்துள்ளார். ஆனால், விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றில் அ.சா.1 பாஸ்கரன் என்பவர் 31.05.2023ம் தேதி காலை 10 மணிக்கு சிகிச்சைக்கு வந்ததாக குறிப்புள்ளது. மேலும், அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 கழனியில் மோட்டாரை இயக்கி தண்ணீர் பாய்ச்ச சென்ற பொழுது பாலசுந்தரம், அம்சா, திருவேங்கடம் மற்றும் மங்கைலட்சுமி ஆகியோர் தன்னை வழிமடக்கி அனைவரும், தன்னை கையால் குத்தி உதட்டில் காயம் ஏற்படுத்தினர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மேலும், இவ்வழக்கில் எதிரிகள் தாக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் கற்கள் எவையும் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் கைபற்றப்பட்டு சமர்பிக்கப்படவில்லை. மேலும், அ.சா.1 அவரது நீதிமன்ற

சாட்சியத்தில், எதிரிகள் அவரை வழிமறித்து, ஆபாசமாக பேசி அவரை கொலைமிரட்டல் விடுத்தாக சாட்சியம் அளிக்கவில்லை.

**12.** கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1–ன் மனைவி அ.சா.2ம் அவரது சாட்சியத்தில் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பகல் 8 மணிக்கு தங்கள் வீட்டில் உள்ள பனை மரத்தில் உள்ள பனம்பழம் ஆஜர் எதிரிகளின் வீட்டின் நிலத்தில் விழுந்தது சம்மந்தமாக சண்டை போட்டார்கள் என்றும், தான் வீட்டில் இருந்த பொழுது திருவேங்கடம் என்பவர் தன் கணவர் மீது கல்லை எடுத்து மூக்கு மற்றும் வாயில் அடித்ததாக சாட்சியம் அளித்து அவரது குறுக்கு விசாரணையில் தான் ஆஜர் எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிடுவதாக கூறியுள்ளார்.

**13.** மற்றொரு கண்ணுற்ற சாட்சி அ.சா.3 மோகன் என்பவர் தனது சாட்சியத்தில் சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் தன் தம்பி பாஸ்கர் என்பவருக்கும், ஆஜர் எதிரிகள் திருவேங்கடம் மற்றும் பாலசுந்தரம் ஆகியோருக்கும் இடையே சண்டை நடந்ததாக சொன்னார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையில் சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக தெரியாது என்றும், யார் யாரை அடித்தார்கள் என்று தான் பார்க்கவில்லை என்றால் சரிதான் என ஒப்புக் கொண்டுள்ளார். அ.சா.1 அவரது சாட்சியத்தில் எண்டத்தூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தையல் போட்டுவிட்டு மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சேர்ந்ததாக கூறியுள்ள நிலையில் அ.சா.3 அவரது நீதிமன்ற முதல் விசாரணையில் அ.சா.1க்கு முற்றிலும் முரண்பட்டு தனது தம்பியை உத்திரமேரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக கூறியுள்ளது அரசு தரப்பிற்கு பாதகமாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**14.** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான மேல்வருவத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.காசிநாதன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை முறை நன்கு தெரியும் என்பதால் வழக்கு ஆவணங்களைப் பார்வையிட்டு மேற்படி காவல் நிலையத்தின் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வரும், அ.சா.4 மோகன் என்பவர் மேற்படி புலன் விசாரணை அதிகாரி புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடம் சென்று

புலன் விசாரணை செய்து எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

**15.** மேலும், அரசு தரப்பில் முன்னிருத்தபட்ட அ.சா.1 எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக கூறி பிரிவு 359(3) BNSS–ன் கீழ் மனுதாக்கல் செய்த மனு C.M.P.NO.547/2025–ல் கோப்பிற்கு எடுக்கபட்டதில் இவ்வழக்கின் குற்றப்பிரிவுகள் சமரசம் செய்து கொள்ளமுடியாத குற்றங்கள் என்பதால் அம்மனு தள்ளுபடி செய்யபட்டுள்ளது.

**16.** இவ்வழக்கில் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமாதானம் பேசி முடித்து கொண்டதாக தாக்கல் செய்த மனுவை வைத்து பார்க்கும் போது, மாண்புமிகு உச்சநீதிமன்றம் Central Bureau of Investigations Vs Sadhu Ram Singh Reported in 2017(1) MLJ Crl724 SC என்ற வழக்கில் Continuance of Criminal Proceedings after compromise has been arrived between complainant and accused, would amount to abuse of process of court and futility – Trial would be prolonged and it may end in which may be of no consequence to any parties என்று கூறியுள்ளதை கவனத்தில் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. இந்த முன் தீர்ப்பின் அடிப்படையில் இருதரப்பினரும் சமாதானமாக சென்ற நிலையில் இவ்வழக்கினை தொடர்வது அவசியமற்றது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** இந்த வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் எவரும் எதிரிகள் அ.சா.1யை வழிமறித்து, ஆபாசமான வார்த்தையால் பொது இடத்தில் அருவருக்கதக்க வகையில் மற்றவர்கள் முன்னிலையில் பேசினார்கள் என்றோ, எதிரிகள் அவருக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலே ஆராய்ந்த காரணங்கள் மற்றும் முரண்பாடுகளால் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் எதிரிகளின் செய்கையால் தான் ஏற்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது. எனவே, இந்த வழக்கில் புலன்விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சாட்சியத்தினை மட்டும் வைத்து எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபணம் செய்து விட்டதாக இந்நீதிமன்றம் கருத இயலாது. எனவே, எதிரிகள் மீது வனையப்பட்ட இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டுகள் கீழ் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை.

எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை விடுதலை செய்வது நீதியின் பால் உகந்தது என கருதி அவ்வாறே தீர்மானித்து, மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

**18.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையிலும், இந்த வழக்கின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபணமாகததால் எதிரிகள் இதச பிரிவுகள் 341, 294(b), 323, 506(1)–ன் படியும் தண்டிக்கப்படத்தக்க குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் அக்குற்றசாட்டுகளிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**19.** இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எந்தவித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

**20.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரிகள் பிணையில் சென்றிருந்தால், மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

BAVYA BALU
Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.04.10 17:48:40 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மதுராந்தகம்.**

<u>அரசு தரப்புச் சாட்சிகள்:</u>

| | |
|---|---|
| அ.சா.1 | பாஸ்கரன், த/பெ.பலராமன் |
| அ.சா.2 | மாலா, க/பெ.பாஸ்கரன் |
| அ.சா.3 | மோகன், த/பெ.பலராமன் |
| அ.சா.4 | மோகன் த/பெ.ஏழுமலை |

<u>அரசு தரப்புச் சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் | அ.சா.4ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.4ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் | அ.சா.4ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.4ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |
| அ.சா.ஆ.5 | விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று | அ.சா.4ஆல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. |

<u>அரசு தரப்புச் சான்றுப்பொருள் :</u> இல்லை.

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:</u> இல்லை.

<u>குறிப்பு:</u>

1. சாட்சிகள் யாரும் விசாரணைக் காலத்தில் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2. விசாரணைக் காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தனர்.

3. காவல் துறையினருக்கு நடவடிக்கைச்சீட்டு வழங்கப்பட்டது.

BAVYA BALU

Judicial Magistrate No. II
Digitally signed by BAVYA BALU
Location: Madurantakam
Date: 2026.04.10 17:48:48 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
மதுராந்தகம்.